**செய்தி வெளியீடு எண்: 120** **நாள்: 19.02.2018**

## செய்தி வெளியீடு

இன்று (19.02.2018) சென்னை தலைமை செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் உலக சிக்கன நாள் விழா 2016 (ம) 2017 ஆம் ஆண்டுகளில் பள்ளி மாணவர்/ மாணவியர் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, குழு நாடகப் போட்டி, குழு நடனப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர் மற்றும் மாணவியருக்கு பரிசுகள் வழங்கியும் மாநில அளவில் தமிழ்நாடு சிறுசேமிப்பு வசூலில் முதன்மைபெற்ற நிலைமுகவர்கள் (SAS) / மகளீர் முகவர்கள் (MPKBY) / குழு முகவர்கள் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார் உடன் கூடுதல் தலைமை செயலாளர்/ நிதித்துறை செயலாளர் திரு, க. சண்முகம் , இ.ஆ.ப மற்றும் சிறுசேமிப்புத் துறை ஆணையர் (பொ) டாக்டர். பு. உமாநாத் இ.ஆ.ப. மற்றும் சிறுசேமிப்புத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். மேலும் தமிநாடு அரசு சிறுசேமிப்புத் துறையின் மேம்படுத்தப்பட்டபுதிய இணையதளத்தினை (www.tnSmallSavings.org) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் துவக்கிவைத்தார். உடன் கூடுதல் தலைமை செயலாளர்/ நிதித்துறை செயலாளர் திரு, க. சண்முகம் , இ.ஆ.ப., சிறுசேமிப்புத் துறை ஆணையர் (பொ) டாக்டர். பு. உமாநாத் இ.ஆ.ப மற்றும் சிறுசேமிப்புத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர் இந்நிகழ்வானது மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் பாரதரத்னா டாக்டர். புரட்சித்லைவர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பாக இதே பிப்ரவரி மாதத்தில் (25.2.1968) ல் அப்போது அவர் சிறுசேமிப்புத்துறை துணைத்தலைவராக பொறுப்புவகித்த காலத்தில் நடைபெற்ற சிறுசேமிப்புத்துறை கலைநிகழ்ச்சி குறித்து அந்நாளில் பத்திரிக்கையில் வெளிவந்த அரிய புகைப்படத்தொகுப்பு மேற்படி புதிய இணையதளத்தில் **“50 ஆண்டுகளுக்கு முன்னால்”** என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**